# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2102/27 - 2018 දෙසැම්බර් මස 19 වැනි බදාදා - 2018.12.19

*2102/27 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில், பதியதலாவை பிரதேச செயலாளர் பிரிவில், பின்தென்ன பத்து தெற்கு சிறு பிரிவில், மீகஸ்வத்த கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள பதியதலாவ டொ. பொ. பீபீ. 49, மேலதிக இலக்கம் 54 இல் துண்டு இல. *3516* உடைய காணித் துண்டு 0.0126 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய வலகமவத்த என்றழைக்கப்படுகின்ற காணிப்பகுதிக்குரிய எல்லைகளாவன:

வடக்கு : துண்டு இல. *3517* ; கிழக்கு : துண்டு இல. *3517*; தெற்கு : துண்டு இல. 3517 மற்றும் *1622* ; மேற்கு : துண்டு இல. *1622*.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பதியத்தலாவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் *2019* ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எம். என். விஜயதுங்க,
பிரதேச செயலாளர்,
பதியத்தலாவ.

பிரதேச செயலகம்,
பதியத்தலாவ.

*1 - 73*